சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 68/2022**

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **அறிவழகன் PW2** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்.**, சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **அறிவழகன்** | வயது |
| தகப்பனார் பெயர் | | கிராமம் |
| கணவர் பெயர் | | தாலுக்கா |
| தொழில் | | |

16.06.2026

**முதல் விசாரணை**

நான் நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் வாய்க்கால்காரத்தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் வாதிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் 1ம் வாதியும் கணவரும், 2,3, வாதிகளின் தகப்பனாராகிய குணசேகரனை எனக்கு தெரியும். குணசேகரன் மற்றும் வாதிகளும் பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீட்டில் அடமானத்திற்கு குடியிருந்து வந்தார்கள். குணசேகரன் இறந்து விட்டார். குணசேகரன் இருக்கும்போதே வீட்டை காலி செய்து விட்டார்கள். அடமானத்திற்கு கொடுக்கப்பட்ட தொகையான ரூ.1,70,000/-த்தை பிரதிவாதி குணசேகரனுக்கு கொடுக்கவில்லை. மேற்படி தொகையை கொடுப்பதாக பிரதிவாதி ஒரு உறுதிமொழி வர்த்தமனம் எழுதிக்கொடுத்துள்ளார். 15.03.2020 தேதியில் எழுதப்பட்டது, அதில் 90 நாட்களில் மேற்படி தொகையை கொடுப்பதாக எழுதியுள்ளது. அந்த உறுதிமொழி

ஆவணத்தில் குணசேகரன் மற்றும் மகாலிங்கம் கையெழுத்து செய்துள்ளார்கள்.



அதில் முதல் சாட்சி கையெழுத்தான அறிவழகன் என்பது எனது கையெழுத்துதான். அந்த கையெழுத்து மட்டும் **வா.சா.ஆ.7** ஆகும். அதில் மற்ற சாட்சிகளான சக்திராஜன், குருநாதன் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். பிரதிவாதி அந்த உறுதிமொழி ஆவணத்தின்படி பணத்தை திரும்ப கொடுக்கவில்லை. இந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

(பிரதிவாதிதரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைத்து உத்தரவிடப்படுகிறது)